# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

நம்முடைய
மீறுதல்களினிமித்தம்
அவர் காயப்பட்டு,
நம்முடைய
அக்கிரமங்களினிமித்தம்
அவர் நொறுக்கப்பட்டார்;
நமக்குச் சமாதானத்தை
உண்டுபண்ணும்
ஆக்கினை அவர்மேல்
வந்தது;
அவருடைய தழும்புகளால்
குணமாகிறோம்.

ஏசாயா 53:5

**2018**
**மார்ச் மாத**
**செய்தி மலர்**

இதழ் : 11
மலர் : 14



# சபை ஊழியரின் அன்பு மடல்



## தேவனுடைய ஆவியினால் நடத்தப்படல்............

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த மாதம் முழுவதும் நம்மைக் கண்மனி போல பாதுகாத்து வழிநடத்தின தேவன் இந்த லெந்து நாட்கள் முழுவதும் நம் கூட இருந்து நமது திருச்சபையை திருப்திபடுத்தி வழி நடத்துவார்.

பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார் " எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ? அவர்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள்" என்று ரோமர்–8:14.

தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுதல் என்றால் என்ன? இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்திரத்திற்கு கொண்டு போகப்பட்டார். அவர் இரவும் பகலும் 40 நாட்கள் உபவாசம் இருந்தார். இதைத்தான் நாம் லெந்து நாட்கள் என்று அனுசரிக்கிறோம். பிறருக்காக வாழ்ந்து தன்னுடைய இரத்தத்தினாலே மனுமக்களுக்கு மீட்பைக் கொடுப்பதற்காக அவர் ஆவியினால் நடத்தப்பட்டார். அதேப் போல பிலிப்பு ஆவியின் ஏவுதலினாலே எத்தியோப்பிய மந்திரி ஒருவனுக்கு சுவிசேஷத்தைச் சொல்லி இரட்சிப்புக்கு நேராய் வழி நடத்தி ஞானஸ்நானம் கொடுத்த பின்பு ஆவியானவர் அவரை மறைந்து போக செய்தார். இவைகளையெல்லாம் ஆவியானவர் தன்னுடைய சித்தத்தின்படி நடத்தப்பட்ட சம்பவங்களை குறிக்கிறது.

இயேசு மறு பிறப்பை குறித்து பேசும்போது " காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது அதின் சத்தத்தைக் கேட்கிறாய். ஆகிலும் இது இன்னதென்று இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்கு போகிறதென்றும் உனக்கு தெரியாது. ஆவியினால் பிறந்தவன் எவனும் அவனும் அப்படியே இருக்கிறான்" (யோவா–3:8)

மேலும் ஆவியினால் நடத்தப்படுதலைக் குறித்து கீழ்வரும் பகுதிகளில் ஒரு சில அடையாளங்களை குறிப்பிட விரும்புகிறேன்.

## 1. தேவனுக்குப் பிரியமாணவர்கள்.......

"மாம்சத்திற்குட்பட்டவர்கள் தேவனுக்கு பிரியமாய் இருக்கமாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவினுடைய ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர்-8:14,15) கிறிஸ்துவினுடைய ஆவியுடையவன் தேவனுக்குப் பிரியமானவனாய் காணப்படுவான். தன் மாம்சத்தின் விருப்பங்களுக்கு அவன் ஒரு நாளும் இடங்கொடுக்க மாட்டான். இதுவே மறுபிறப்பு என்ற அனுபவம். காரணம் "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" (யோவா-3:6) என்று இயேசு கூறினார். "மாம்சத்தின் படி பிழைத்தால் சாவீர்கள் ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள" (ரோம-8:13)

பிரியமானவர்களே இந்த லெந்துக் காலங்களில் நம் மாம்சத்தில் காணப்படுகிற ஆசை இச்சைகளை களைவோம். பெருமைகளையும் வைராக்கியங்களையும் விட்டொழிப்போம். பொய், பண ஆசை, ஆடம்பரங்கள் யாவையும் அழித்து விடுவோம். இவைகளுக்குப் பதிலாக ஆவியின் கனிகளை கடைபிடிப்போம். அன்பு ஒன்றையே பிரதானமாக கொண்டு எல்லோரிடமும் சமாதானத்தோடு பழகுவோம். இவைகளையே ஆவியினால் நடத்தப்படுதல் என்று வேதம் குறிப்பிடுகிறது.

## 2. புத்திர சுவீகாரத்தைப் பெற்றுக்கொண்டவர்கள்........

திரும்பவும் பயப்படுகிதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல் அப்பா, பிதாவே என்றுக் கூப்பிட பண்ணுகிற புத்திர சுவீகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேக் கூட சாட்சி கொடுக்கிறார். (ரோம-8:15,16) இந்த உலகத்திற்கு நாம் அடிமைகளல்ல அப்படியிருந்தால் நாம் பிசாசுக்கு பிள்ளைகளாயிருப்போம். நாமோ? மரித்து உயிரோடு எழுந்த இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகள். அவர் பாவத்திற்காக மரித்து நீதிக்காக உயிர்த்தெழும்பியவர். அவர் இரத்தத்தின் கிரயத்தால் புத்திரசவீகாரம் என்ற அந்தஸ்தைப் பெற்றவர்கள். அவரை நோக்கி எப்போதும் அப்பா பிதாவே எனக் கூப்பிடக் கூடிய சிலாக்கியத்தைப் பெற்றவர்கள். (1-கொரி-6:20)

வேதம் கூறுகிறது சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் (மத்-5:9) என்று

" மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையுடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" (எபே-4:2,3) கூடுமானால் உங்களால் ஆனமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். (ரோம-12:18) மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்றெந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவொருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும், இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவொருக்கொருவர் மன்னியுங்கள். (எபேசி-4:30-32)

மேலே சொல்லப்பட்ட அனைத்துக் காரியங்களும் தேவனுடையப் பிள்ளைகளுக்குரிய குணங்களாகும். மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடையப் பிள்ளைகளல்ல. வாக்குத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்த சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள். (ரோம-9:8)

## 3. கிறிஸ்துவுக்காக பாடுபடுகிறவர்கள்.........

இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகளல்ல என்று எண்ணுகிறேன். கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூட பாடுபட்டால் அப்படியாகும். (ரோம–8:17,18). இயேசு சொன்னார் உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன். (யோவா–16:33)

பிரியமானவர்களே! இந்த உலகத்தில் வாழ்கின்ற நாட்கள் முழுவதும் நாம் பரிசுத்தத்தை காத்துக்கொள்ள போராட வேண்டும். ஆவியானவரும் நம்முடைய பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். (ரோம–8:26) பெற்றுக்கொண்ட ஆத்தும இரட்சிப்பை நாம் கடைசி வரைக் காத்துக்கொள்ள போராட வேண்டும். பிசாசின் தந்திரங்களை எதிர்த்துப் போராட வேண்டும். (எபேசி–6:12) அப்பொழுதான் நாம் ஜெயத்தைப் பெற்றுக்கொண்டு இரண்டாம் மரணத்தினால் சேதப்படமாட்டோம். ஜீவக்கிரீடத்தைப் பெறுவோம். ஆண்டவருடைய சிங்காசனத்தில் அவரோடு கூட உட்காருவோம். ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப்போம், ஜாதிகள் மேல் அதிகாரம் செலுத்துவோம், வெண்வஸ்திரம் தரிப்போம், ஜீவ புஸ்தகத்தில் இடம் பெறுவோம், திறந்த வாசலைப் பெறுவோம், தேவனுடைய ஆலயத்தில் தூணாவோம், புதிய நாமத்தைப் பெற்றுக்கொள்வோம். (வெளி–2,3 அதிகாரங்கள்)

பொறுமையாக அவருடைய ஊழியத்தை செய்து சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்காக பாடுபடவேண்டும். உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம். கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பவன் யார்? உபத்திரவமோ? வியாகுலமோ? துன்பமோ? பசியோ? நிர்வாணமோ? நாசமோசமோ? பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயுமிருக்கிறோமே? மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறு எந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மை பிரிக்கமாட்டாதென்று நிச்சயத்திருக்கிறேன்.

தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் மேற் சொன்ன அனைத்துக் காரியங்களையும் இந்த உலகத்தில் நிறைவேற்றி தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு பங்குள்ளவர்களாய் வாழ்வார்கள். நாமும் கூட இந்த லெந்துக் காலங்களிலே தேவனுடைய ஆவியைப் பெற்றுக்கொள்ளவும் அவரால் வழி நடத்தப்படவும் ஒப்புக்கொடுப்போம். அப்பொழுதுதான் நாம் தேவனுக்கு பிரியமுள்ளவர்களாக, அவர்களுடைய பிள்ளைகளாக, ஆண்டவருக்காக பாடுபடுகிறவர்களாக இந்த உலகத்தில் வாழ்ந்து அநேகருக்கு ஆசீர்வாதத்தை அளித்து பரம இராஜ்ஜியத்தில் நித்திய நித்திய காலமாக ஆண்டவரோடு கூட வாசம் செய்வோம்.

கர்த்தர் தாமே நம் சபையை ஆசீர்வதித்து அர்த்தமுள்ள லெந்து நாட்களை கடைப்பிடிக்க அருள் புரிவாராக!

கர்த்தருடைய பணியில்,
அன்பு சகோதரன்,

S.ஸ்டாலின்

## உங்கள் மனகசப்பு உங்கள தனி சிறப்பாக மாற போகிறது

ஒரு சிறிய உவமை மூலமாக உங்ளோடு சில காரியங்களை பகிர்ந்து கொள்ள ஆசைபடுகிறேன். இது ஒரு சிறிய உவமைதான் என்றாலும் இதில் பொதிந்துள்ள உண்மை விசேஷமானது.

கர்த்தருடைய தேசமாகிய இஸ்ரவேல் தேசத்தின் மோரியா மலை அடிவாரம். அங்கு கனிதரும் மரம் ஏராளமாய் இருந்தன. அந்த பகுதியில் குறிப்பிடும்படியாய் ஒரு மரம் இருந்தது, அந்த மரத்திற்கு,மர் (எபிரேயர் பெயர்)என்று பெயர். அந்த மரம் மிகவும் குறைவான உயரம் உடையது. அதனால் மிக பெரிதாக வளர முடியவில்லை. அதின் அதிகபட்ச உயரமே 12 அடிதான். அவ்வளவு அதன் உயரம,ஆகையால் அதை செடி என்று சிலர் கருதுவதுண்டு. அதன் கிளைகளும் அவ்வளவு பெரியதாக வளரவில்லை. அதன் தண்டுபகுதி மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. அதன் இலைகளும் அவ்வளவு அடர்த்தியாய் இல்லை. ஆனாலும் மஞ்சள் நிற பூக்களோடும். திராட்சைபழ வடிவில் அதன் சிறிய கனிகளோடும் பார்ப்பதற்கு மிக அழகாக காணப்பட்டது.

இஸரவேலர் கூடார பண்டிகை கொண்டாட நற்கனிகளை தேடி மலைக்கு வருவது வழக்கம். அந்த பிரகாரம் பழங்களை தேடி அநேக இஸ்ரவேலர்கள் வந்தார்கள். ஆனால் அந்த மர் மரத்தின் அருகே ஒருவர் கூட வரவில்லை. அந்த மரத்தை பார்க்கிற போதே எல்லோருக்கும் ஒரு வெறுப்பு ஏற்பட்டது. மற்ற மரங்களை எல்லாம் விரும்பி நாடி சென்றார்கள். இந்த மர் மரத்தை மட்டும் உதாசீன படுத்தினார்கள்.சரி மனிதர்களதான் அப்படி என்றால் பறவை இனங்களும் ஒன்று கூட அதின் கிளைகளில் வந்து அமரவோ அதன் கனிகளை புசிக்கவோ வரவில்லை. இது ஏன் என்று அந்த மரத்திற்கு புரியவேயில்லை. இது அந்த மர் மரத்திற்கு மிகுந்த வேதனையை கொடுத்தது.

ஒரு நாள் அந்த மரம் பார்த்து கொண்டு இருக்கையில் அதின் அருகே நின்ற ஒலிவ மரத்தில் அநேகர் ஒலிவ பழங்களை பரித்தார்கள். ஆனால் அந்த மர் மரத்தை ஒருவர் கூட ஏறெடுத்து பார்க்கவில்லை இந்த மர் மரம் மனமுடைந்து போனது. அது பார்த்துகொண்டிருக்கையில் ஒரு சிறுவன் ஓடி வந்து மர் மரத்தின் கனியை பறித்தான் மர் மரத்திற்கு மிகுந்த சந்தோஷம்.

தன் வாழ்கையில் முதல் முறையாக ஒரு சிறுவன் தன் கனிகளை பரித்து புசிக்க போவதை ஆவலாய் பார்த்தது. ஆனால் அதற்குள் அந்த சிறுவனின் தகப்பன் விரைந்து வந்து அவன் கையில் இருந்து மர் மரத்தின் பழத்தை தட்டி பரித்தான்,அவன் அந்த சிறுவனிடம் மர் மரத்தை காட்டி "இந்த மர் மரத்தின் உச்சி கொப்பு முதல் அதன் வேர்வரை அத்தனை கசப்பு சுவை உடையது. அதை தொடாதே" என்றான்.

மர் மரத்துக்கு அப்பொழுதான் காரியம் புரிய ஆரம்பித்தது. தன் பூ.இலை,கனி ,மரப்படை வேர் என்று அத்துனை பாகங்களும் கசப்பு ( Bitterness) மிகுந்தது என்று. ஆம் அதன் சகல பாகங்களும் வாயில் வைக்க முடியாத அளவு கசப்பானது. அந்த மரம் மிகவும் துயருற்றது.

மர் மரம் தன் அருகே நின்றவர்களை எல்லாம் கூப்பிட்டு புலம்ப ஆரம்பித்தது. " ஐயா கசப்பாக படைக்கப்பட்டது என் தவறல்ல, என் கசப்பு சுவைக்கு நான் காரணமல்ல, உங்களை படைத்த தேவன்தான் என்னையும் படைத்தார். அவர்தான் இந்த கசப்பை எனக்கு வைத்துவிட்டார். நான் என்ன செய்வது ஐயா என்னை புறக்கனியாதீர்கள் என்று" கெஞ்சியது ஆனால் ஒருவர் கூட அதன் சத்தத்தை கேட்க வில்லை

மனிதர்தான் எனக்கு செவி கொடுக்கவில்லை பறவைகளையாவது கூப்பிடலாம் என்று அவைகளை கூப்பிட்டு பார்த்தது, ஆனால் பறவைகளோ நாங்கள் எத்தனையே கசப்பான கனிகளை உண்கிறோம் ஆனால் உனது கனிகளை போல கசப்பான கனிகளை நான் உண்டதில்லை என்று அது எங்களுக்கு வேண்டாம் அவை புசிக்க தகாதவை என்று சொல்லி பறந்து சென்று விட்டன. மர் மரம் தன்னுள் இன்னும் உடைந்து போனது.

அந்த மர் மரம் தேவனை நோக்கி கூப்பிட ஆரம்பித்தது. என்னை உருவாக்கின என்தேவனே எத்னையோ சிருஷ்டிப்புகள் இருக்கின்றன எத்தனையோ விதமான மரங்கள உள்ளன. ஆனால் எனக்குள் மட்டும் இப்படியொறு கசப்பை வைத்ததென்ன? கசப்போடு படைக்கபட்டது என்னுடைய தவறா? நான் என்ன செய்வேன்? ஏன் என்னுடைய வாழ்க்கையில் இத்தனை கசப்பு? என் கசப்பை என்னிடத்தில் இருந்து எடுத்துவிடும், என்னை மாற்றும் என்று கெஞ்ச ஆரம்பித்தது.

தன்னை நோக்கி கூப்பிடுகிற காக்கை குஞ்சுகளுக்கும் பதில் கொடுக்கிற இரக்கமுள்ள தேவனல்லவா அவர் தேவன் பதில் கொடுத்தார். அவர் கொடுத்த பதில் இதுதான் "காத்திரு" என்பதே தேவனுடைய வார்த்தையை நம்பி மர் மரம் காத்திருந்தது. மாதங்கள் சென்றன வருடங்கள் சென்றன. ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை உருவத்திலோ அதன் சுவையிலோ எந்த ஒரு மாற்றமும் இல்லை.

மர் மரம் பரலோகத்தின் தேவனை நோக்கி கூப்பிட ஆரம்பித்தது. தன்னை படைத்த தேவனிடத்தில் முறையிட்டது. சில நேரங்களில் பதில் வந்தது பல நேரங்களில் பரலோகம் மௌனம் காத்தது. மர் மரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை தன்னுடைய கசப்பை குறித்து தேவன் கொடுத்த வாக்குதத்தங்கள் எல்லாம் பொய்த்து விட்டனவே என்று புலம்பியது. தன் வாழ்க்கையில் ஏன் இந்த கசப்பு ஏன் இந்த (Bitterness)ஏன் இந்த குறை? என்னுடைய மனக்குறை என்றைக்கு தீரும்,? நானும் மற்றவர்களை போல ஆசீர்வதிக்கப்படுவது எப்போது.? என்னுடைய ஏக்கங்களுக்கு ஒரு முடிவில்லையா? ஏன்று அங்கலாய்த்தது மர் மரமும் எத்தனை காலம்தான் பொருத்திருக்கும்.

ஒரு நாள் வியாகுலத்தின் மிகுதியால் உறக்க சத்தமிட்டு தேவனிடத்தில் விண்ணப்பிக்க ஆரம்பித்தது. தேவனே தனக்கு கொடுத்த வாக்குதத்தங்கள் எல்லாம் என்னவாயிற்று.?என் கசப்பு என்றைக்கு ஐயா மாறும'? என் வாழ்க்கையில் என்னை குறித்து உம்முடைய திட்டம்தான் என்ன?ஏன் அதை வாழ்க்கையில் அனுமதித்தீர்? என்னுடைய மனக்குறை என்றைக்கு தீரும்? நானும் மற்றவர்களை போல ஆசீர்வதிக்கபடுவது எப்போது? என்னுடைய ஏக்கங்களுக்கு முடிவில்லையா? ஏன்னுடைய கசப்ப மாற்ற மாட்டீரா? எனக்கொரு அற்புதத்தை செய்ய மாட்டீரா? தேவனே எனக்கு இரங்கும் இரங்கும் என்று கதர ஆரம்பித்தது.

அதன் உச்சி கொப்பு முதல் அதன் வேர்வரை தேவனை நோக்கி கூப்பிட ஆரம்பித்தன. அதன் ஆழ்மனதில் இருந்து ஓர் அங்கலாப்பு வெளிப்பட ஆரம்பித்தது. அதன் வேதனையை அதனால் தாங்கி கொள்ள முடியாமல் மர் மரம் வியாகுலத்தால் கண்ணீர்விட்டது. அதன் பட்டையெல்லாம் உரிய ஆரம்பித்தன அதன் தண்டு பகுதி வெடிக்க ஆரம்பித்தது. அதன் கிளைகள் கீரல் விழுந்தன. அதன் கிளை மூட்டுகளைல்லாம் விரிசல் ஏற்பட்டது. அவற்றின் வழியே அதன் கசப்பு எல்லாம் கண்ணீராக வெளிவர ஆரம்பித்தது. அதன் கசப்பான அதன் தண்டின் உயிர்சாரு (sap) எல்லாம் வெடிப்புகள் வழியாக கொட்ட ஆரம்பித்தது. அது வேதனை அடக்கமாட்டாமல் அதன் கண்ணீர் பெருக்கெடுத்தது. அதன் கூக்குரல் பரலோக்தை எட்டியது.

முர் மரத்தின் கசப்பு எல்லாம் கண்ணீராக வெளிப்பட வெளிப்பட அந்த பகுதியில் இருந்த எல்லோரும் ஒரு தெய்வீக வாசணையை உணர ஆரம்பித்தார்கள். உலகம் கண்டிராத வாசணை. அப்படி ஒரு சுகந்த வாசனையை அதுவரை நுகர்ந்ததே இல்லை. அந்த பிராந்தியமே நறுமணத்தால் நிறம்பியது. அந்த வாசனை நிறம்பி அத்தனை பேரையும் தன் வசம் ஈர்க்க ஆரம்பித்தது. அந்த வாசனை எங்கிருந்து வருகிறது என்று அலைய ஆரம்பித்தனர். எல்லோரும் இந்த வாசனை வரும் திசையை நோக்கி வர ஆரம்பித்தனர்.

அந்த வாசைன வருவது மர் மரத்தில் இருந்துதான் என்று உணர ஆரம்பித்தனர். மர் மரம் வடித்த அதன் கசப்பான கண்ணீர ( Tears) அதன் தண்டை சுற்றி பிசினாக வடிந்து நின்றது. தேன் கிளைகளிலிருந்து தரையெல்லாம் வடிந்திருந்தது. எல்லோரும் அதை போட்டி போட்டு பொறுக்கினார்கள். அதன் பிசினையெல்லாம் எனக்கு உனக்கென்று போட்டி போட்டு பிய்த்தெடுத்தர்கள் அந்த மர் மரத்தின் கசப்பு எழும்ப பண்ணின வாசைன அவ்வளவாய் அவர்களை ஈர்த்தது. அந்த கசப்பான மர் மரத்தின் கண்ணீருக்கு ( பிசினுக்கு) வேதம் ஒரு பெயர் கொடுத்தது அதுதான் ( வெள்ளைபோளம்) யாத்ராகமம் 30– 23.25 ஆசாரிப்பு கூடார பரிசுத்த அபிஷேக தைலத்திற்கு தேவையான ஐந்து பொருட்களில் முதலாவது தேவனால் குறிப்பிடபட்டது அந்த வெள்ளை போளம்தான். மர் மரத்தின் கசப்பு தெய்வத்தின் பார்வைக்கு மட்டுமல்ல உலகத்தின் பார்வையிலும் பீரீத்தியாய் காணப்பட்டது. மர் மரத்தின் கசப்பான கண்ணீர்தான் வெள்ளைபோளம். ( Mirrh Tears) (வெள்ளைபோள மரத்தின் கண்ணீர) என்றே அழைக்கிறார்கள். தங்கத்தை பார்க்கிலும் கூடுதல் விலைக்கு விற்க்கபடுகிறது. மர் மரத்தின் கசப்புதான்.( Bitter) அதன் சிறப்பாக ( Better) ஆக மாறிவிட்டது. மர் மரத்தின் Bitter ஐ எல்லாம் Better ஆக மாற்றிவிட்டார்.

எனக்கன்பான தேவ ஜனமே மர் மரத்தை போல உங்கள் வாழ்க்கையில் உள்ள சில குறைவுகள் அல்லது நீங்கள் சந்தித்த நிகழ்வுகள் உங்கள் வாழ்க்கையில் கசப்பாக இருக்கின்றனவா? கசப்பான காரியங்களை தாங்கிக்கொள்ள முடியாமல் தவிக்கிறீர்களா? இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்கள் உங்களுடைய வாழ்கையிலே கசப்பாகி போய்விட்டனவா? கலக்கம் வேண்டாம் நிச்சயமாக உங்கள் வாழ்க்கையின் கசப்பு எல்லாம் உங்கள் வாழ்வில் சிறப்பாக மாற்ற தேவன் போதுமானவர். அன்னாளுடைய கசப்பு என்ன? பிள்ளையில்லாதது. ஆனால் அன்னாளுடைய வாழ்க்கையின் தனி சிறப்பே சாமுவேல் என்கிற பிள்ளை

ரூத்தினுடைய கசப்பு என்ன? தன் கணவனை இழந்தது. ஆனால் ரூத்தீனுடைய தனி சிறப்பு போவாஸ் அல்லவா!

உங்கள் வாழ்க்கையில் கசப்பு உண்டானால் . நிச்சயமாக ஒரு தனி சிறப்பு உண்டு. பரிசுத்த வேதாகமத்தில் சிலரோடு இந்த வெள்ளை போளம் தொடர்பு படுத்தபட்டுள்ளது. அதில் முதல் நபர் யோசேப்பு, இரண்டு இடங்களில் யோசேப்பு வாழ்க்கையில் வெள்ளைபோளம் பற்றி குறிப்பிடபட்டுள்ளது, வெள்ளை போளம் விற்கசென்ற இஸ்மவேலரிடத்தில்தான் யோசேப்பு விற்கபட்டதுதான் ( ஆதி 37:35)யோசேப்பு வாழ்கக்கையில் கசப்பான தருணம். ஆனால் அதையே யோசேப்பின் தனிசிறப்பான வாழ்க்கைக்கு அச்சாரமாய் தேவன் மாற்றி போட்டார். வேள்ளைபோள வியாபாரிகளிடத்தில் விற்க்கபட்டபோது துவங்கிய யோசேப்பின் கசப்பு எல்லாவற்றையும் – யோசேப்பின் தகப்பன் யோசேப்புக்கு வெள்ளைபோளம் கொடுத்தனுப்பியபோது(ஆதி 43:11) மதுரமாக தேவன் மாற்றியிருந்தார்.

கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அவரது சிரசின் மேல் வெள்ளைகள் பரணியில் இருந்த வெள்ளைபோளத்தை ஊற்றினால். அவள் வாழ்க்கையின் கசப்பு (Bitterness) என்னவென்று தெரியவில்லை. ஆனால் அதை சிறப்பாக கர்த்தர் மாற்றினார் சுவிசேஷம் அறிவிக்கபடும் இடங்களில் எல்லாம் அவளை குறித்து அறிவிக்கபடுகிறதே. இதுதான் அவளுடைய தனிச்சிறப்பு. (மத் 26:13)

நம்முடைய இரட்சகரையே கிறிஸ்துவே இயேசுவை கண்ணோக்கி பார்ப்போம். அவருடைய வாழ்க்கையின் கசப்பு என்ன? பரலோகத்தை துறந்து பூமியல் வந்து ஏழை கோலம் எடுத்து பிறந்ததா? அவர் சிலுவையில் பட்ட பாடுகளா? அல்லது ஜீவனுள்ள தேவனாகிய அவரது மரணத்தை ருசி பார்த்தாரே அதுவா? ஆம் இவை மூன்றுமே நம் இரட்சகர் அனுபவித்த கசப்பான காரியங்கள்தான். அவருடைய பிறப்பு பாடுகள் இறப்பு இவை மூன்றிலுமே வெள்ளை போளம் பற்றி குறிப்பிடபட்டுள்ளது.

கர்த்தர் பிறந்த போது வெள்ளை போளம் காணிக்கையாக கொடுக்கபட்டது. (மத் 2:11)கர்த்தர் சிலுவையில் பாடுகளை அனுபவித்தபோது. திராட்சை ரச காடியில் வெள்ளை போலம் கலந்து கொடுக்கபட்டது. (மாற்கு 15.23) (மத் 27:34) கர்த்தர் மரித்து அடக்கம் பண்ணும் போதும் அவர் சரீரத்தில் வெள்ளைபோளம் பூசினார். நிக்கோதேமு( யோ 19 –39–40) அதன் அடையாளம் என்ன? அவை எல்லாம் கர்த்தர் கடந்து வந்த கசப்பான பாதைகள். ஆனால் கர்த்தருடைய கசப்பான அனுபவங்கள் எல்லாம் முழு உலகத்தையும் மதுரமாக மாற்றிவிட்டதே.

அன்பான தேவ ஜனமே உங்கள் வாழ்க்கயில் கசப்பான அனுபவங்கள் மிகுந்துள்ளதா? கலங்க வேண்டாம். நீங்கள் கர்த்தரின் பார்வையில் வெள்ளை போளம். கர்த்தர் நம் வாழ்கையில் சில கசப்புகளை அனுமதிப்பது நம் வாழ்க்கை கசந்து போகவேண்டும் என்பதற்கல்ல. நம்மை கொண்டு அநேகருடைய வாழ்க்கையை இனிமையாகதான் மாற்ற கர்த்தர் விரும்புகிறார். வெள்ளை போளத்திற்கு ஒரு சிறப்பு உண்டு அது எதன் மீதெல்லாம் படுகிறதோ அவை எல்லாவற்றையும் இனிமையானதாக மாற்றிவிடும். உங்களை கொண்டு லட்சங்களுடைய வாழ்க்கையை கர்த்தர் இனிமையானதாக மாற்ற விரும்புவதால்தான் உங்கள் வாழ்க்கையில் சில கசப்புகளை அனுமதிக்கிறார். பொறுத்திருங்கள் உங்கள கசப்பு எல்லாம் மதுரமாக மாறும்.

மர் (கசப்பு என்று பொருள் ) என்ற பெயரில் இருந்துதான் மாரா என்ற சொல் பிறந்தது. இதற்கும் கசப்பு என்றே பொருள். மாராவிலே இஸ்ரவேல் ஜனங்கள் குடிக்க கூடாதபடி தண்ணீர் கசப்பாய் இருந்தது. அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தை காண்பித்தார்.அதை தண்ணீரில் போட்டபோது அது இனிமையானதாக மாறிற்று அந்த மரம் இந்த மர் மரம்தான் என்பது மேலான வேத பண்டிதர்கள் ஏற்றுக் கொண்ட ஒன்று. மர் மரம் ஒரு கசப்பான மரமாயிற்றே அதை போட்டால் தண்ணீர் கசப்பு எப்படி மாறும் என்று நினையாமல் மோசே கர்த்தருக்கு கீழ்படிந்தார். மர் மரத்தின் கசப்பை கொண்டே கர்த்தர் மாராவின் கசப்பை மதுரமாக மாற்றினார். உங்கள கசப்பான அனுபவங்களை நினைத்து கொண்டு இராமல் கர்த்தருக்கு கீழ்படிந்திருங்கள். உங்களை கொண்டு அகேருடைய கசப்பான வாழ்க்கையை கர்த்தர் மாற்ற திட்டம் பண்ணியிருக்கிறார்.உங்கள் வாழ்வின் கசப்பான அனுபவங்களுக்குள் அநேகருடைய வாழ்வின் கசப்பை மாற்றும் வல்லமையை கர்த்தர் வைத்திருக்கிறார்

கடைசியாக எலியாவின் அபிஷேகம் எலிசா மீது இரண்டு பங்காக ஊற்றப்பட்டது எலியா உயிரோடிருக்கயைில் மொத்தம் எட்டு அற்புதங்கள் செய்தார். அப்படியானால் எலிசா எத்தனை அற்புதங்களை செய்ய வேண்டும்? பதினாரல்லவா? ஆனால் எலிசா உயிரோடிருந்த காலத்தில் அவர் பதினைந்து அற்புதங்களே செய்தார் அதற்கு பிறகு அவர் வியாதிபட்டு மரித்து போனார். எல்லோரும் எண்ணினார்கள். கர்த்தர் எலிசாவுக்கு கொடுத்த வாக்குதத்தம் நிறைவேறவில்லை. இனி அவ்வளவுதான். வார்த்தை நிறைவேறாது. எலிசா மரித்தாயிற்று. இனி அவருக்கு கொடுத்த வாக்குதத்தம் நிறைவேறாது என எண்ணினார்கள். ஏலிசா மரித்து மறு வருஷமாயிற்று எல்லோரும் எலிசாவை மறந்து போனார்கள் ஆனால் கர்த்தர் எலிசாவையும் மறக்கவில்லை அவர் கொடுத்த வாக்குதத்தத்தையும் மறக்க வில்லை. இஸ்ரவேலில் ஒரு வாலிபன் மரிக்க பண்ணி அவன் சடலத்தை எலிசாவின் கல்லறையிலே போடும்படியாக சூழ்நிலையை கர்த்தர் உண்டு பண்ணுகிறார். அப்படியே அவனை எலிசாவின் கல்லறையிலே போட்டார்கள். வாலிபனின் சரீரம் எலிசாவின் எலும்புகளின் மேல்பட்டவுடன் வாலிபன் உயிர்த்தான். எலிசாவின் எலும்புகளை கொண்டு பதினாராவது அற்புதத்தை செய்து தனது வாக்குதத்தத்தை கர்த்தர் நிறைவேற்றினார்.

தேவன் உங்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறாத நிலையில் முழு உலகமே அழிந்தாலும் கர்த்தர் ஒரு புது உலகத்தை உண்டு பண்ணி அதிலே உங்களை வைத்து உங்களுக்கு கொடுத்த வாக்குத்தத்ததை நிறைவேற்றியே தீருவார். கலங்க வேண்டாம். உங்கள கசப்பு எல்லாம் களிப்பாக மாறும் உங்கள் வாழ்வு கசப்பு எல்லாவற்றையும் அவர் மதுரமாக மாற்றியே தீருவார். ஏனெனில் நீங்கள கர்த்தரின் பார்வையிலே வெள்ளைபோளம்

ஆமென்

கர்த்தரின் பணியில்

போதகர். ஜெப்லின் ஜோசப் ( பரமக்குடி ,தமிழ்நாடு, இந்தியா)

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; ... " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. கிருபா கலிய மூர்த்தி
செல்வி. ஜான்சி ராணி ராஜவேல்
செல்வி. காட் கிப்ட் ஜஸ்டிஸ்
செல்வி. திவ்யா அருள்மணி
செல்வி. நிகிட்டா அருண் இம்மானுவேல்
செல்வி. ஸ்டெஃபானா சதீஸ்குமார்
செல்வி. ஜெஸ்வின் ஆ. யேசுதாஸ்
செல்வி. அபியா செல்வி தர்மர்
செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்

செல்வன். ஷெரிடன் சைமன் பால்ராஜ்
செல்வன். ஜேடன் பால் கிரண்குமார்
செல்வன். ஜோஷ்வா பால் பாண்டியராஜ்
செல்வன். ரையன் சாமுவேல் ஜான்சன்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்
செல்வன். ஜாண்ராஜ் ராஜவேல்
செல்வன். ஜெகு சாமுவேல் செல்வசிங்
செல்வன். அட்ரியல் கேமுவேல் தாஸ்

சகோதரி. வித்யா வில்சன்
சகோதரி. சாரா சவிதா சந்தோஷ்
சகோதரி. சிஜோ ஸ்ரீதர்
சகோதரி. மரியம் பாக்கியசெல்வி
சகோதரி. ஆஸ்லி முத்தையா
சகோதரி. கீதா ஜெயக்குமார்

சகோ. அருள்மணி
சகோ. சுனில் சுந்தர்ராஜ்
சகோ. ஜெயக்குமார்
சகோ. சாமுவேல்
சகோ. ஜாண் மில்லர்
சகோ. ஜாண்போஸ்கோ
சகோ. யேசுரெத்தினம்
சகோ. ஜெஸ்லின் வில்ஸன்
சகோ. முத்தையா
சகோ. ராஜா ரவிச்சந்திரன்
சகோ. லாசர் ராஜமணி
சகோ. டேவிட் பாஸ்கரன்
சகோ. பால் டேனியேல்
சகோ. ஜெய ரத்தினகுமார்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி ஹ திரு. ஆசீர்வாதம்
திருமதி ஹ திரு. லாசர் ராஜமணி
திருமதி ஹ திரு. ஜெயசீலன்
திருமதி ஹ திரு. சுகுமார்
திருமதி ஹ திரு. ஜஸ்டஸ் விஜில் குமார்
திருமதி ஹ திரு. சத்தியநாதன்

# 2018 மார்ச் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/03/2018 | சகோ. பிரசாத் | சகோ.ஜெபராஜ் |
| 11/03/2018 | சகோ. ஐசக்துரை | சகோ. அசோக்குமார் |
| 18/03/2018 | சகோ. பால்பாண்டியன் | சகோ. சுகுமார் |
| 25/03/2018 | குருத்தோலை ஞாயிறு ஆராதனை | |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/03/2018 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. ஜெகநாதன் |
| 09/03/2018 | சகோ. ரவிசந்திரன் | சகோ. பிரேம்குமார் |
| 16/03/2018 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 23/03/2018 | சகோ.ஆரோக்கியதாஸ் | சகோ.அற்புத ராஜ் |
| 30/03/2018 | பெரிய வெள்ளிகிழமை ஆராதனை | |

**08/03 /2018** அன்று முழு இரவு ஜெபம் (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் )– நேரம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை

**25/03/2018** குருத்தோலைஞாயிறு ஆராதனை
இடம் பரிசுத்த பவுல் ஆலயம், அஹமதி நேரம் ( மாலை 5.00 முதல் 6:15 வரை)

**29/03/2018** பெரிய வியாழன் ஆராதனை
இடம் பரிசுத்த பவுல் ஆலயம், அஹமதி நேரம் ( மாலை 5:15 to 7:15)

**30/03/2018** பெரிய வெள்ளி ஆராதனை நேரம் 4:30 to 6:45)
இடம் பரிசுத்த பவுல் ஆலயம், அஹமதி

**1/04/2018** உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனை நேரம் 3:45 to 5:15
இடம் பரிசுத்த பவுல் ஆலயம், அஹமதி

**23/3/2018** மாதாந்திர வாலிப ஐக்கிய கூடுகை நேரம்

# 2018 மார்ச் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுககு தக்க பதிலை வேத ஆதாரத்துடன் ஏழுதவும் புதிருக்குள் வரும் விடையின் எழுத்துக்களின் எண்ணிக்கை அடைப்பு ( ) குறிக்குள் குறிக்ப்பட்டுள்ளது**

## வலம் இருந்து இடம்

1. சீர் கெட்டவன் என்று சொல்லப்பட்ட இவன் பெயரில் ஒரு மலையும் உண்டு. எது (2)
2. இவனும் இவன் சந்ததியும் தள்ளுண்டதும் தாங்கள் அறியாத தேசத்திலே துரத்திவிடபட்டதும்.எது? என்று சொல்லப்பட்டவன் (3)
3. கள்ளவார்த்தைகளாளே எளியவர்களை கொடுக்கும்படி தீவினைகளை யோசிககிறவன் (2)
4. இது ராஜாவின் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படுகிறது. (2)

## இடமிருந்து வலம்

5. ஒரு துரவும், தேசத்துக்கும், மனிதனுக்கும் இப்பெயருண்டு (2)
6. இவன் ஒரு ஆசாரியன், இவனுடைய குமாரன் பெரிய தீர்க்கதரிசியாக இருந்தான்(2)
7. உங்களை குணமாக்கவும் உங்களில் இருக்கிற காயத்தை ஆற்றவும் அவனால் கூடாமற் போயிற்று என்று எழுதப்பட்டவன்.(3)
8. கடல்களின் நடுமையத்தில் உன் தாபரம் இருக்கிறது என்று சொல்லப்பட்ட தேசம்(2)

## கீழ்ருந்து மேல்

9. இந்த தேசத்திலிருந்து துரத்தபட்டவர்கள் சகல ஜாதிகளிலும் சிதறப்டுவார்கள் என்று எழுதப்பட்ட தேசம்.(3)
10. இதன் ஸ்தானத்தை, புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வ சங்காரம் பண்ணுவார் என்று எழுதப்பட்டுள்ளது. 930
11. பூர்வீக பட்டணம் ஒன்றின் பெயர்(3)12.ஒரு மனிதனுக்கும், விக்கிரகதுக்கும் இப்பெயருண்டு(3)

## மேலிருந்து கீழ்

1. அவர்கள் தேசம் இரத்த வெறி கொண்டு அவர்களைய் மண் நிணத்தினால் கொழுத்துவோம் என்று சொல்லப்பட்ட தேசம் எது(3)

13. இது கூர்மையாக்கபட்ட அம்பு என்றும், பொய்யை பிரயோகிக்க வில்லாக இதை வளைகிறார்கள் (2)
14. இங்கு இனி தீர்க்கதரிசனம் சொல்லாதே என்று சொல்லப்பட்ட பட்டணம் இதற்கு வேறு பெயரும் உண்டு(4)

## மூலைக்கு மூலை

14.இந்த பட்டணம் தேசத்தின் அலங்காரம் என்று என்று சொல்லப்ட்டிருக்கிறது.(6)

விடைகளை வருகின்ற 20-03-2018 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps மூலமும் அனுப்பலாம் # 66015503)

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

## 2018 பெப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில்

1.ஒட்டகம், குழி,மூசல், முயல், பன்றி, ( லேவி 11:4–8)

2.நாலுகாலால் நடமாடுகிற ஊரும் பிராணிகள் ( லேவி 11:20)

3.விருத்தசேதனம் ( லேவி 12:3)

4.இரணமாம்சம்( லேவி 13:14)

5.மங்கின வெள்ளை புள்ளிகள் (13:39)

6.உயிரோடிருக்கும் சுத்தமான இரண்டு குருவிகள் கேதுரு கட்டை சிவப்பு நுலால் , ஈசோப்பு( லேவி 14:4)

7.பழுதற்ற இரண்டு ஆட்டு குட்டிகள் ஒரு வயதான பழுதற்ற ஒரு பெண்ணாட்டுகுட்டி போஜன பலிக்கான எண்ணையிலே பிசைந்து ஒரு மரக்காலில் பத்தில் மூன்று பங்காகிய மெல்லிய மாவு ஆழாக்கு எண்ணெய்( லேவி 14:10)

8.சுத்திகரிக்க படுகிறவனின் வலது காதின்மடல், வலது கையின் பெருவிரல், வலது காலின் பெருவிரல். ( லேவி 14:17)

9.கர்த்தருக்கென்று ஒன்று , கோக்காடாக விடப்படும் வெள்ளாட்டு கடாவுக்கென்று ஒன்று.( லேவி 16:8)

10.குடியில்லாத தேசத்துக்கு( லேவி 16:22)

11.ஆசாரியனுக்காகவும் சபையின் ஜனங்களுக்காகவும். ( லேவி 16:33)

12.இரத்தம்( லேவி 17:11)

13.கர்த்தருடைய கட்டளைகள், நியாயங்கள்.( லேவி 18:4)

14.விக்கிரங்களை( லேவி 19:4)

15. குறி நாள் ( லேவி 19:26)

## 2018 பெப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. சாந்தி
Sis. லதா கிறிஸ்டோபர்

Sis. அ.ஜோன் அசோக்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
Bro. ஜாண்
Bro. ஜாண்ஸன்
Bro. டேவிட் பாஸ்கான்

# வஞ்சக வலையை கிழிப்போம் வாருங்கள்

**நெகேமியா ஆறாம் அதிகாரம் வரும் பொழுது ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டிய அத்தனை நற்பண்புகளும் நெகேமியாவினிடத்தில் இருப்பதை காண முடிகிறது.**

Disiplline makes the nation great **என்று ஆங்கில பழமொழி உண்டு. ஒழுங்கு படுத்தப்பட்ட வாழ்வே உயர்வான தேசத்தை உருவாக்கும். நெகேமியாவின் வாழ்வில் அனேக நற்பண்புகள் இருந்தபடியால் அவர் பெரிய பதவியில் உயர்த்தபட்டார். பான பாத்திரகாரனாய் வேலை செய்ய நெகேமியா எருசலேமிலே அதிபதியாய் உயர்த்தபட்டார். எனவே இன்று தேவனுடைய சபையில் உள்ளோர் அனைவரும் தங்களுக்குள் நற்பண்புகள் வளர்த்துகொள்ள முயற்சிக்க வேண்டும். பரிசுத்த நியாயமே நமது பகைவனை ஓட ஓட விரட்டியடிக்கும் இந்த ஆறாம் அதகாரத்தில் நெகேமியாவுக்கு எதிராக ஐந்து விதமான வஞ்சகங்களும் சத்துருக்கள் கொண்டு வந்தார்கள் அத்தனை வஞ்சகங்களையும் முறியடித்து நெகேமியா ஜெயம் பெற்றார் அவைகளை விவரமாக தியானிப்போம்.**

**1. பேச்சில் வஞ்சகம் (6:1–4)**

**நெகேமியா 6 ஆம் அதிகாரம் துவங்கும் போது அலங்கம் கட்டபட்டுவிட்டது. அங்கே திறப்பு ஒன்றும் இல்லை கதவுகள் மட்டும் இன்னும் போடபடவில்லை அப்படிபட்ட வேளையிலும் சத்துருக்கள் சன்பல்லாத்து, தொபியா, கேஷேம், ஆகிய மூன்று பேரும் தங்கள் வஞ்சகத்தை நெகேமியாவுக்கு எதிராக செயல்படுத்த தொடங்கினார்கள். (6:12) தேவ ஊழியத்தில் இன்று இப்படிபட்ட வஞ்சகர்களை பரவலாக பார்க்கமுடியும். முதல் வஞ்சகம் பேச்சில் வஞ்சகமாகும்.**

**நாம் ஓனோ பள்ளதாக்கில் இருக்கிற கிராமங்கள ஒன்றில் ஒருவரை ஒருவர் கண்டு பேசுவோம் வாரும் என்று கூப்பிட்டார்கள். அவர்களோ வென்றால் எனக்கு பொல்லாப்பு செய்ய நினைத்தார்கள். (6:2) என்று பார்கிறோம். அதாவது தேவ மனிதனுக்கு எதிரே கூட்டங்கூடினார்கள். தேவ பிள்ளைக்கு தீங்கு செய்யும்படி கமிட்டி போட்டார்கள். இன்று பல இடங்களில் நடக்கும் கமிட்டியின் தீமானங்கள் தரிசனமுள்ளவர்களின் தேவ பணிவிடையை தடுப்பதற்குதான் போடபடுகின்றன இப்படிபட்ட கமிட்டிகளுக்கு நாம் போகக்கூடாது. இப்படிபட்ட கமிட்டியின் தீமானங்களுக்கு நாம் பயப்படவும் கூடாது பொதுவாக கமிட்டிகளுக்கு ஆண்டவர் இரண்டு விளக்கங்கள் சொல்லி கொடுத்தார்.**

Come +Eat+tea= Committee **கூடி வரவேண்டும் சாப்பிட வேண்டும் காபியோ டீயோ சாப்பிட்டுவிட்டு ஆவியானவர் தம் சித்தம் போல தமது ஊழியத்தை**

நடத்தட்டும் என்று தலைவனின் பொறுப்பில் தீர்மானம் எடுக்க விட்டுவிட்டால் அது சங்கீதம் 133:1-2 வசனம் வரை உள்ளது போல ஆசீர்வாதமான ஊழியமாய் இருக்கும் ஆனால் சில இடங்களில் வேறுமாதிரியாய் செயல்படுவர்.

Come with ஈட்டி = Committee ஆக செயல்படுபவரும் உண்டு வீட்டில் இருந்தே புறப்படும் போது ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள கையில் ஈட்டியை எடுத்து ெகாண்டு வருவார்கள். களங்கமற்ற தரிசனகாரனை குத்தும்படி வருவார்கள்.

நெகேமியாவுக்கு எதிராக கூடிய கமிட்டியார் ஈட்டியை கையில் வைத்து கொண்டுதான் கூட்டங்கூடினார்கள். நெகேமியா அப்படிபட்ட பொலலாதவர்கள் கூடும் கூட்டத்திற்கு போவதை தவிர்த்தார்

யோசேப்புக்கு எதிராக செயல்பட்ட உடன் பிறப்புகளும் இப்படிபட்ட கமிட்டியரே. தாவீதுக்கு எதிராக செயல்பட்ட சவுலும் அப்னேரும் இப்படிபட்ட கமிட்டியரே. அன்பானவர்களே நாம் கூடிவருதல் பிறருக்கு பொல்லாப்புச் செய்வதற்காய் இருக்ககூடாது இடிப்பதற்கல்ல ஊரை கட்டுவதற்கே கர்த்தர் நம்மை அழைத்துள்ளார் ( II கொரி 13 :10)

வஞ்சகங்களும் துவக்கம் பிசாசாயிருக்கிறான். தனது பேச்சால் ஆதித்தாய் ஏவாளை வழிதப்ப வைத்தான் அவனின் மனது கொடுக்கபட்டது 2 கொரி 11:3 சபையாரின் மனதும் கொடுக்கபட்டது நெகேமியாவையும் வார்த்தை ஜாலங்களின் வஞ்சகத்தால் கெடுக்கபார்த்தார்கள். இன்று நமக்கும் எதிராக வஞ்சக வார்த்தைகளின் வலை விரித்து வைக்ககூடும் அவைகளுக்கு சரியான பதில் கொடுக்க வேண்டும் .

நான் பெரிய வேலையை செய்கிறேன் நான் வரகூடாது நான் இந்த வேலையை விட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் அது மினக்கட்டு போவானேன் என்று சொல்ல சொன்னர்(6:3)

தேவ பிள்ளைக்கு தேவ ஊழியததை பற்றி சரியாக தெளிவான வெளிப்பாடு வேண்டும் தேவனுக்காக செய்யும் எந்த பணிவிடையும் பெரிய வேலையாய் இருக்கிறது எனவே மற்ற உலக காரியங்களில் தேவ மனிதன் தன் நேரத்தை வீணாக்க கூடாது.

(இன்னும் வரும்)

**சபையின் செயற்குழு சார்பாக இனிய பிறந்த நாள் மற்றும் திருமண நாள் வாழ்த்துக்கள்**

# எழுந்து கட்டுவோம்

நெகே–2:20 " பரலோகத்தின் தேவனனவர் எங்களுக்கு காரியத்தைக் கைகூடி வரப்பண்ணுவார்"
அகலியாவின் குமாரனாகிய நெகேமியா தன் பூர்வீக இடமாகிய எருசலேமை குறித்து விசாரித்தான். அப்பொழுது "அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதையும், அலங்கம் இடிக்கப்பட்டது என்றும் அறிந்துகொண்டான். தன்னுடைய ஜனத்திற்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்று நெகேமியா தீர்மானித்தான். அதற்கு அவன் என்ன செய்தான் தெரியுமா?
நெகே–1:4 1.அழுதான் 2. துக்கித்தான் 3. உபவாசித்தான் 4. மன்றாடினான்

## 1.அழுது எழுந்து கட்டுதல்

1–சாமு–1:10–ம் அதிகாரத்தில் அன்னாள், கர்த்தரை நோக்கி மனங்கசந்து, விண்ணப்பம் பண்ணி அழுதாள், அதனால் தான் தேவன் அவள் ஜெபத்தை பார்த்து சாமுவேல் என்னும் ஒரு தீர்க்கதரிசியை கொடுத்தார்.

அவள் மனிதன் முன்பு அழாமல், தனது துக்கத்தை, மனசஞ்சலத்தை கர்த்தர் சந்நிதியில் அறிக்கையிட்டாள். மனிதன் முகத்தை பார்ப்பான், ஆனால் நம் தேவன் நமது இருதயத்தை பார்ப்பார். சங்கீ–22:24 சிறுமைப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயென்னாமலும், அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலும் இருந்து தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார். நாமும் நமது தேவைகளை அழுது தேவனிடத்தில் கேட்கும்போது அவர் தர வல்லமை உள்ள தேவனாயிருக்கிறார் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

## 2.துக்கித்து எழுந்து கட்டுதல்

1–நாள–4:9, 10 யாபேஸின் தாய் அவனை துக்கத்துடனே பெற்றேன் என்று சொல்லித்தான் அவனுக்கு யாபேஸ் என்று பெயரிட்டாள். ஆனால் இஸ்ரவேலின் தேவன் அவனை ஆசீர்வதித்தார். இன்று மனிதர்கள் நம்மை பார்த்து உனக்கு luck இல்லை time சரி இல்லை என்று சொல்லலாம். யாபேஸின் தாயும் அவனை பார்த்து அப்படி தான் சொன்னாள். ஆனால் தேவன் அவனை ஆசீர்வதித்தார் அல்லவா? நாமும் துக்கத்தோடு விண்ணப்பத்தை வைத்தாலும் அதை சந்தோஷமாக தர தேவன் வல்லவராயிருக்கிறார்.

## 3.உபவாசித்து எழுந்து கட்டுதல்

எஸ்தர்–5:8 எஸ்தர் தன் ஜனத்திற்காக விண்ணப்பம் பண்ணி மன்றாடினாள். அவள் துக்கித்து, உபவாசித்து, ராஜா அவனிடத்தில் உனக்கு என்ன வேண்டும் என்று கேட்கும் போது. அது ராஜ்ஜியத்தின் பாதியானாலும் தருவேன் என்றும் சொன்னான். அப்போதும் அவள் தனது சொந்த விருப்பத்தை பொருட்படுத்தாமல் தன்னுடைய ஜனத்திற்காக திறப்பின் வாசலில் நின்றாள். வெற்றியும் கண்டாள். உதாரணமாக நம் முன்பு தேவதூதன் நின்று உனக்கு என்ன வேண்டும் என்று கேட்கும் போது நம்மில் எத்தனை பேர் சொந்த விருப்பத்தை வெறுத்து தம்முடைய ஜனத்திற்காக திறப்பில் நிற்போம்? சிந்திப்போம்.

## 4.மன்றாடி எழுந்து கட்டுதல்

தானி 6:10 தானியேல் தேவனுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு (தான் முன்பு செய்து வந்தபடியே) ஜெபிக்க தேவனை நோக்கி கூப்பிட மறந்து விடவில்லை. நாம் சிந்திப்போம்! நாம் நம்முடைய தேசத்திற்காக, ஜனத்திற்காக, ஆட்சி செய்வோருக்காக எத்தனை நாட்கள் அழுது, துக்கித்து, உபவாசித்து ஜெபித்தோம்.

நெகேமியா அதோடு விட்டுவிடவில்லை, அவன் அர்தசாஷ்டா ராஜாவிடம் போய் முறையிடுகிறான். நெகே–1:5–11 வரை உள்ள வசனங்களை வாசித்தோம் என்றால் அவன், தேவனிடம் எப்படி ஜெபித்தான் என்று புரியும். இடிக்கப்பட்ட எருசலேமின் அலங்கத்தையும், சுட்டெரிக்கப்பட்ட அதின் வாசல்களையும் திரும்ப கட்ட திட்டமிட்டு அதற்கு தேவையான அனைத்து பொருட்களையும் கொண்டு அந்த தேசத்தை எழுந்து கட்ட வைத்தான்.

பிரியமானவர்களே! இந்த கனினி உலகில் நாம் ஓடிக் கொண்டு இருக்கிறோம். நம்முடைய தேவைகளை, ஆசைகளை பூர்த்தி செய்ய தினமும் திட்டமிட்டுக் கொண்டு இருக்கிறோம். ஆனால் ஒரு நாள் வரும், அன்று ஜீவ புஸ்தகத்தில் தேவன் பார்த்துக்கொள்வோம். பழைய வாழ்க்கையை மறந்து புதிய வாழ்விற்காய் அவர் அண்டை சேர நமது ஜெப வாழ்க்கையை எழுந்து கட்டுவோம்! வாருங்கள்!

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரி : ஆஸ்லின் சிபின்

# மேரி மெக்லீன்

சென்னையை அடுத்த சோழலிங்கபுரம். 64 புண்ணியத் தீர்த்தங்களும், 25–க்கும் மேற்பட்ட வழிபாட்டுத் தலங்களும் உள்ள இடம். ஒரு காலத்தில் வைணவ ஆலய குருமார்களைப் பயிற்றுவித்த சமஸ்கிருத கலாசாலை இங்கு செயல்பட்டது. சமய வைராக்கியமுள்ள " சாதி இந்துக்களின் நகரம் " என்றே இதை அழைக்கலாம். இப்பகுதியில் அருட்பணி ஆற்றுவது என்பது எளிதல்ல. அக்காலக் கட்டத்தில் குழந்தைத் திருமணங்கள், சதி போன்றவை வழக்கத்தில் இருந்தன.

சிறு குழந்தைகளுக்குத் திருமணம் செய்த பின் கணவன் இறந்து போ–னால் அக்குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளோ மிக மிகக் கொடூரம்! குழந்தைகளின் வண்ண உடைகளைக் களைந்து, வெள்ளாடை உடுத்தி, பூவைக் களைந்து, பொட்டை அழித்து, மொட்டையடித்து, தாலியை அறுத்து, வீட்டிற்குள் ஒரு மூலையில் தள்ளிவிடுவார்கள். இவர்கள் வீட்டை விட்டு வெளி–யே வருவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகக் காணப்பட்டது.

மேரி மெக்லீன் இப்பெண்களுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தார். ஆஸ்திரேலியாவை விட்டு இந்தியா வந்தார். சோழலிங்கபுரத்தை கிறிஸ்துவின் நகரமாக மாற்றத் துணிந்தார். வீட்டில் அடிமைகளாக அடைபட்டுக் கிடந்த பெண்களுக்கு எழுத படிக்கக் கற்றுக் கொடுத்தார். "ஜனனா மிஷன் பணி" என்ற அமைப்பின் மூலம் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார். வேதபாடங்களும், ஜெபங்களும் கற்றுக்கொடுக்கப்பட்டன. இயேசு கிறிஸ்துவை இம்மக்களின் நண்பராக்கினார்.

அன்புள்ளம் கொண்ட அன்னையாக, ஆஸ்திரேலிய பிரிஸ்பித்தேரியன் சபையின் முதல் அருட்பணியாளராக இந்தியா வந்த மெக்லீன், சிறந்த சேவியா–கவும், விசுவாசிகளுக்கு சிறந்த மாதிரியாகவும் வாழ்ந்தார். அவர்களின் சேவை இன்றும் தொடர்கிறது. அன்பரே! அறியாமையால் அடைபட்டுக் கிடக்கும் மக்களை முன்னேற்ற முன் வருவீரா?

கர்த்தரின் பணியில்,

S.சுகுமாரன்

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு










உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக
ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்
66021072

செயலாளர் – சகோ. ஜெகநாதன்
23917287 - 66889535

பொருளாளர்– சகோ. எபநேசர்
23922058 - 66857827

பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . தயா இயேசுரெத்தினம்
23924262 - 94974732

வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. ஆரோக்கியராஜ்
66159784

Church Website Address - ahmaditamilcongregation.org
Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only